1989 ஏப்ரல் 19]

அவர்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதால் இதுபற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனை.

79. (*வினா எண். 218)— திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காச நோய் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ): தற்போது இதுபற்றிய குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. துரை சந்திரசேகரன் : தலைவரவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து அறுநூறுக்கும் மேற்பட்ட உள் நோயாளி களும் நூற்றுக்கணக்கான புறநோயாளிகளும் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வந்த மருத்துவ மனையில் இன்றைக்கு மிகக் குறைந்த அளவில் சிகிச்சைப் பெறும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவரவர்களே, வெளிநோயாளிகள் பற்றிய சராசரியான எண் ணிக்கை 1987-ல் 254 ஆக இருந்தது; உள் நோயாளிகள் சராசரியான எண்ணிக்கை 17 ஆக இருந்தது; பிரசவ எண்ணிக்கை 108 ஆக இருந்தது.

திரு. துரை சந்திரசேகரன் : தலைவரவர்களே, அந்த மருத்துவ மனைக்குச் சொந்தமான 500 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் மூலம் ஆண்டுதோறும் வருகின்ற வரு மானம் எவ்வளவு? அரசு, மருத்துவ மனைக்கு வழங்கும் மானி யம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே, 1988-89-ல் மொத்த நிதி ஒதுக்கீடாக ரூ.5,35,000 வழங்கப்பட்டிருக்கிறது. 1988-89-க்கு மருந்துகள் வாங்குவதற்காக மட்டும் 2,62,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது. அங்கேயிருந்து வருமானம் எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவரவர்களே, அவினாசி அருகில் இருக்கிற............

[1989 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி செங்கிப்பட்டி பற்றியது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, புகழ் பெற்று விளங்கிக்கொண்டிருந்த அந்த காசநோய் மருத்துவ மனையில் இவ்வளவு குறைவான நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் தாழ்வுற்றிருப்பதற்கு என்ன காரணம்? அந்தத் தனியார் மருத்துவமனையை அரசு மருத்துவ மனையாக எடுத்துக்கொள்ள அரசுக்கு ஏதாவது சங்கடம் இருக்கிறதா? அது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்து அரசு மருத்துவ மனையாக எடுத்துக்கொள்ள அரசு முயற்சி செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவரவர்களே, மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இணை இயக்குநர் 29—2—1988 அன்று அந்த செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனையைப் பார்வை யிட்டார். மருத்துவமனை பற்றிய அவருடைய கருத்துக் குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த மருத்துவமனையில் உள்ள வார்டுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள 500 ஏக்கர் நிலத்தை அரசு பொது மருத்துவமனை கட்ட உபயோகப்படுத்தலாம் என்று அவர்கள் குறிப்பு கொடுத் திருக்கிறார்கள். செங்கிப்பட்டியில் வசிக்கும் காசநோயாளி கள் 100 படுக்கை வசதி கொண்ட அரசு இராஜா மருத்துவமனை, திருச்சி அல்லது தஞ்சாவூர் மருத்துவமனைக்குச் சென்று அவசர அல்லது செறிவான சிகிச்சைப் பெறுவதற்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மருத்துவமனையை பொது மருத்துவமனையாக மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மருத்துவ மனைத் தலைவர், தஞ்சாவூர் ஆகியவர்களிடம் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அது குறித்து இன்னாள் வரையில் பதில் ஏதும் வரவில்லை. இந்த மருத்துவமனையை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு பொது மருத்துவ மனையாகச் செயல்படுத்தலாம் என்ற கருத்து அரசுக்குத் தெரிவிக்கப்பட் டது. இதனால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 50 இலட்சம் ரூபாய் செலவாகும். ஆகவே, இது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தைப் பெற்ற பிறகு முடிவு செய்யப்படும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துக்களில் ஏராளமான விபத் துக்கள் தினசரி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளைத் தவிர்க்கவும்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் செங்கிப்பட்டிக்கு வரவேண்டும். (சிரிப்பு).

1989 ஏப்ரல் 19]

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கிப்பட்டி மருத்துவ மனைக்குச் சொந்தமான ஒரு பொது நிர்வாகத்திற்குட்பட்ட நஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தற்போது வருமானம் இல்லை என்று சொன்னார்கள். அதற்குரிய நிலங்களிலிருந்து ஏன் வருமானம் வரவில்லை? அப்படி வராமல் இருப்பதற்கு என்ன காரணம்? அதுபற்றி ஆராய்ந்து அந்த நஞ்சை நிலங்களிலிருந்து வருகிற வருமானத்தைப் பெருக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலிருந்த அரசு தமிழ்நாட்டில் இருக்கிற பல அரசு மருத்துவமனைகளை ஒரு பொது உத்தரவு மூலம் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக ஆக்கி இருந்தது. இதனால் பாதிக்கப்பட்டுப் போன அரசு மருத்துவமனைகளில் ஆண்டிப் பட்டியையும் குறிப்பிடலாம். தற்போது அந்த மருத்துவ மனைக்கு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது காச நோய் மருத்துவ மனை பற்றியது.

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் ஆஸ்டின்பட்டி ஒன்றில்தான் காச நோய் ஒழிப்பு மருத்துவமனை இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் எந்த அமைச்சரும் அதைப் பார்வையிட்டு விஸ்தரிப்பு செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளவில்லை. இப்போது எவ்வளவு படுக்கைகள் இருக்கின்றன? மேலும் இப்போது அதிக படுக்கைகள் ஏற்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி செங்கிப்பட்டி தொடர்பானது. ஆஸ்டின்பட்டி தொடர்பானதல்ல.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாதங்களுக்கு முன்னாலே என்னுடைய தொகுதியிலே காச நோய் மருத்துவமனையின் எக்ஸ்ரே யூனிட் ஒன்று துவக்கப்பட்டது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்தான் எக்ஸ்ரே யூனிட்டைத் தொடங்கி வைத்தார்கள். அது இன்னும் செயல்படவில்லை. அதை இயங்க வைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 19

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி செங்கிப் பட்டி பற்றியதாக இருக்கிறது. ஆனால் இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தாலே உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குலசேகரம் அரசு மருத்துவமனை விரிவாக்கம்.

80—(*வினா எண். 423) திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், குலசேகரம் அரசு மருத்துவ மனையை விரிவாக்க எடுத்த அரசின் முடிவுகள் நிறைவேற்றப் பட்டதா?

(ஆ) அங்கு அதிக படுக்கைகளைக் கொண்ட ஒரு கட்டிடம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : (அ) மற்றும் (ஆ) : தற்போது அரசிடம் அதுபற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த குலசேகரம் பகுதி என்பது மலைகள், காடுகள், தோட்டங்கள் நிறைந்த பகுதி. எனவே அந்தப் பகுதியிலே ஏராளமான தொழிலாளர்களும், ஆதிவாசி மக்களும் வாழ்ந்து வருகிற காரணத்தால் குலசேகரம் அரசு மருத்துவ மனையில் குறைந்த பட்சம் அவசரப் பிரிவு, விபத்துப் பிரிவாவது துவக்க அரசு ஏதாவது பரிசீலனை வைத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையை விரிவாக்கம் செய்யவேண்டுமென்ற குறிப்பு, அதாவது 20 படுக்கைகள் கொண்டதாகவும், 6 படுக்கைகளுடன் கூடிய அறுவை அரங்கத்துடன் கூடியதாகவும் கட்டவேண்டுமென்று 1988-89 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அனுப் பப்பட்டுள்ளது. ஆனால் அரசினுடைய நிதி நிலையைக் கருதி இது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய கருத்து அடுத்த ஆண்டு நிதிநிலையைப் பொறுத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.